டெல்லி தொலைக்காட்சி நிலையத்தால், இந்த குறிப்பிடப் பட்டுள்ள நிகழ்ச்சி செப்டம்பர் 17, 1988 அன்று இரவு 7-30 — 9-00 மணியளவில் ஒளிபரப்பப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். வேறு ஏதாவது நேரத்தில் ஒளிபரப்பப் பட்டதா என்றும் கூறவில்லை. இதில் திரு லத்தீப் அவர்கள், தான் பார்த்ததை ஞாபகத்தில் இருந்துதான் கூறியிருக்கிறார். அவர் இன்றும் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதாகவும், தான் பார்த்ததாகவும் தெரிவிக்கிறார். இதில் இருந்து பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் கூறிய செய்தி, அது தவறு என்று அறிந்து, அவையைத் திசை திருப்பும் நோக்கத்துடன் தவறானவற்றை அவைக்கு வேண்டுமென்றே தெரிவித்துள்ளார் என்று கொள்வதற்கில்லை. அதிலும் ஒரு செய்கை அது நிகழவில்லை என்று தெரிந்தும் அவையின் திசையைத் திருப்புவதற்கு அவையில் கூறினால்தான் அது அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும்.

If any statement is made on the Floor of the House by a Member or a Minister which another Member believes to be untrue and incomplete or incorrect, it does not constitute a breach of privilege. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately or knowingly.

எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை ஏதும இல்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. டி. குருசாமி பேரவைத் தலைவருக்கு அனுப்பியுள்ள சட்ட அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. குருசாமி, வழக்கறிஞர், 41, வடக்கு வெளி வீதி, மதுரை—4-4-1989 ஆம் நாளிட்ட சட்ட அறிவிக்கை ஒன்றை எனக்கு அனுப்பியுள்ளார்.

அவ்வறிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது பதவி விலகல் குறித்து எழுதிய கடிதம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தவர் பெயர், அவரின் ஏனைய விவரங்கள் பற்றி சட்ட அறிவிக்கை பெற்ற 15 நாட்களுக்குள் மக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்றும், தவறினால் அதற்குப் பரிகாரம் பெறும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நேரிடும் என்றும் கூறியுள்ளார்கள்.

01—80]|86

இது பேரவைத் தலைவரை அவர் ஆற்றும் கடமையில் அச்சுறுத்துவதாகவும், இடையூறு செய்வதாகவும் அமைகிறது. எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை அடங்கியுள்ளதால் இதனை அவை உரிமைக் குழுவிற்கு ஆய்ந்து அறிக்கை அளிக்க அனுப்புகிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) கோ-ஆப்டெக்ஸ் சார்பில் கொடுக்கப்பட்ட விளம்பரக் காட்சிகளை முழுமையாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாதது குறித்து—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, (குறுக்கீடு) ஜட்ஜ்மெண்டிலே பேசவில்லையே நான். நான் எதற்குப் பேசவருகிறேன் என்றே சொல்லவில்லையே. சபாநாயகர் அவர்களே, நான் இங்கே எழுந்து நிற்கிறேன் என்று சொன்னால், என் உள்ளத்தில் தோன்றுவதையெல்லாம் இங்கே கொட்டி விடுவதில்லை எப்பொழுதும். ஆயிரம் பூக்கள் மலர்ந்தால், பூஜைக்குரிய பூவை எடுத்துப் போடுவது போலே, சில கேள்விகளை மட்டுமே நான் கேட்கிறேன். அதைப்போலவே, இங்கே நமது எம். ஜி. ஆர். அவர்கள் வளர்த்தார்கள் என்று சொல்லுகின்ற ஒரு சொற்றொடர் வந்த காரணத்தினாலே, சொல்கின்றேன். ஒரு தேசிய பாரம்பரியத்திலே வந்த நான், அதனைச் சில செய்திகளிலே உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் சார். அதெல்லாம் முடியாது. நான் சொல்லவேண்டும். I am not yielding. அவர் அனுமதித்து இருக்கிறார். ஒரு கட்சியோடு உறவு வைக்கின்றபொழுது, மற்றக்கட்சி—எம். ஜி. ஆரினுடைய கட்சி எங்களுக்கு அனுமார் போலே உதவி செய்திருந்தால் நாங்கள் ஒரு அணில் போலேயாவது உதவி செய்திருக்கக் கூடும்.

(முற்பகல் 10-40)

அதைப்போல மாண்புமிகு முதல்வர், இப்போது கலைஞர் அவர்கள், அவர்களோடு கூட்டோடு இருக்கின்றபோது அவர்கள் பெருமளவில் உதவி செய்திருந்தால் நாங்கள் சிறிய அளவில் செய்திருக்கலாம். நாங்கள் பெருமளவில் செய்திருந்தால் அவர்கள் சிறிய அளவில் செய்திருக்கலாம், ஆனால் ஒரு வருங்கால அரசியலைப் பற்றிச் சொல்கிறபோது அரசியலுக்குக்